

நேற்று (28.9.2024) சென்னை சமூக பணி கல்லூரியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில், பழங்குடியினரின் கலாச்சாரத்தை பாதுகாத்தல் மற்றும் வளப்படுத்துதல் (PRESERVATION AND PROMOTION OF TRIBAL CULTURAL HERITAGE) தொடர்பாக நடைபெறும் “தொல்குடி தேசிய மாநாட்டில் நிதித்துறை அரசு முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நீதியரசர் (ஓய்வு) கே.சந்துரு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் திரு.ச.அண்ணாதுரை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் செயலாளர் திருமதி.உமா மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (28.09.2024) ஆணையர் அலுவலகத்தில், திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயிலுக்கு புதிய வெள்ளித்தேர் செய்திட 100 கிலோ வெள்ளிக் கட்டிகளை வழங்கி, வெள்ளித்தகடு வேயும் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், வெள்ளி நன்கொடையாளர் ஆர்.சபாபதி, இணை ஆணையர் திருமதி இரா.வான்மதி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### அரசியல் உலகிற்குத் தெளிவான பாதையைக் காட்டியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

# பிரதமரும் இதே மனப்பான்மையுடன் செயல்பட்டால் ஜனநாயக மாண்பு காக்கப்படும்!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, செப். 29 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமரிடம் கோரிக்கை மனு அளித்த தின்மூலம் அரசியல் உலகிற்கு தெளிவான பாதையை காட்டியுள்ளார். பிரதமரும் இதே மனப் பான்மையுடன் தேச ஒருமைப்பாடு, மாநில வளர்ச்சி என்பதை கருத்தில் கொண்டு செயல்பட்டால் ஜனநாயக மாண்பு காக்கப் படும் என “தினகரன்” நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டிற்கு அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற் காக, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அமெரிக்கா சென்று திரும்பிய கையோடு, பிரதமர் மோடியை நேற்று சந்தித்து, 50 நிமிடம் பேசி யுள்ளார். தமிழ்நாடு அரசு சார்பில் 3 கோரிக்கை மனுவை நேரில் அளித்துள் ளார். இந்த சந்திப்பில் முக் கியமாக, ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின்கீழ் (சமக்ர சிக்ஷா) நிதி ஒதுக்கீடு குறித்து முதல்வர் வலியு றுத்தி உள்ளார்.



தினகரன்

செப்டம்பர் 28, 2024 சனிக்கிழமை

முக்கிய சந்திப்பு

தமிழ்நாட்டிற்கு அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக, முதல்வர் மு.க.ஸ்டாலின் அமெரிக்கா சென்று திரும்பிய கையோடு, பிரதமர் மோடியை நேற்று சந்தித்து, 50 நிமிடம் பேசியுள்ளார். தமிழ்நாடு அரசு சார்பில் 3 கோரிக்கை மனுவை நேரில் அளித்துள்ளார். இந்த சந்திப்பில் முக்கியமாக, ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின்கீழ் (சமக்ர சிக்ஷா) நிதி ஒதுக்கீடு குறித்து முதல்வர் வலியுறுத்தி உள்ளார்.

2024-25 கல்வி ஆண்டுக்காக இந்த திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ரூ.3,586 கோடி ஒதுக்கீடு செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதில் 60 சதவீத நிதியை (ரூ.2,152 கோடி) ஒன்றிய அரசு 4 தவணைகளாக கொடுக்கும். முதல் தவணை ஜூன் மாதத்தில் வழக்கமாக விடுவிக்கப்படும். ஆனால் விடுவிக்கப்படவில்லை. இந்த நிதியை விடுவிக்க வேண்டும் என முதல்வர் தனது கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் இரண்டாம் கட்டமாக மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நடந்து வருகிறது. இத்திட்டம் தொடங்கப்படும்போது, ஒன்றிய அரசு நிதியளிக்கும் ...

2024-25 கல்வி ஆண்டுக் காக இந்த திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ரூ.3,586 கோடி ஒதுக்கீடு செய்ய அறி விப்பு வெளியிடப்பட்டுள் ளது. இதில் 60 சதவீத நிதியை (ரூ.2,152 கோடி) ஒன்றிய அரசு 4 தவணை களாக கொடுக்கும். முதல் தவணை ஜூன் மாதத்தில் வழக்கமாக விடுவிக்கப்ப டும். ஆனால் விடுவிக்கப்பட வில்லை. இந்த நிதியை விடு விக்க வேண்டும் என முதல் வர் தனது கோரிக்கை மனு வில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் இரண் டாம் கட்டமாக மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நடந்து வருகிறது. இத்திட்டம் தொடங்கப்படும்போது, ஒன்றிய அரசு நிதியளிக்கும் என்று சொல்லப் பட்டது.

இத்திட்டத்திற்கு ரூ.63 ஆயிரம் கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக் கிறது. ஆனால், இந்த நிதியை தர ஒன்றிய அரசு மறுத்துள்ளது.

இதையும், வழங்கவேண் டும் என முதல்வர் நேரில் அழுத்தம் கொடுத்துள்ளார். ஒன்றிய அரசு ஒப்புக் கொண்டதுபோல் நிதியை விரைவாக ஒதுக்க வேண் டும் என்று முதல்வர் வலியு றுத்தியுள்ளார்.

மூன்றாவதாக, தமிழ் நாடு மீனவர்கள் சந்திக்கும் வாழ்வாதார பிரச்சினை குறித்தும், அதற்கு ஒன்றிய அரசு தீர்வு காண வேண்டி யது குறித்தும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இந்த மூன்று கோரிக்கைகளை முதல்வர் நேரில் வலியுறுத் திவிட்டு, திரும்பியுள்ளார்.

அரசியலில் என்னதான் கருத்து வேறுபாடு இருந்தா லும், மாநில உரிமை, மக் கள் நலன் என வரும்போது அதை ஒருபோதும் விட் டுக்கொடுக்க முடியாது என் பதில் தமிழ்நாடு முதல்வர் தெளிவாக இருக்கிறார். இதில், அரசியல் நாகரி கத்தை அடிபிசகாமல் கடை பிடித்து வருகிறார். அதா வது, மாநில திட்டங்களுக்கு நிதி ஒதுக்கவேண்டியது ஒன் றிய அரசின் கடமை. அதை, கேட்கவேண்டியது எனது உரிமை. அரசியலை பொறுத்த வரை எதிர் எதிர் துருவமாக இருந்தாலும், கேட்க வேண் டிய நபரிடம், நேரிலேயே கேட்டுவிட்டு வந்துவிடு வதே சிறப்பு என செய்து காட்டியுள்ளார். இன்னும் ஒன்றரை ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. அதற்குள் நிலுவை யில் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும் என்பது முதல்வரின் கன வாக உள்ளது. நிதி சிக்கல் தீர்ந்தால் மட்டுமே, நிலு வையில் உள்ள திட்டப்பணி கள் நிறைவேறும். அதன் அடிப்படையிலேயே, இந்த சந்திப்பு நடந்துள்ளது. “தமிழ்நாட்டு மக்கள் நலன் காக்க தேவையான இந்த 3 கோரிக்கைகளை பிரதமர் நிறைவேற்றுவார் என்று நம் புகிறேன். இந்த சந்திப்பு மன நிறைவு தருகிறது. இந்த சந்திப்பை பயனுள்ளதாக மாற்ற வேண்டியது பிரதம ரின் கையில்தான் உள்ளது” என்று தனது பேட்டியில் கூறியுள்ளார்.

எதிரணியில் இருப்பவர் பிரதமராக இருப்பதால், அவரை சந்திக்க வேண்டிய அவசியமில்லை, அவரிடம் கோரிக்கை மனு அளிக்க வேண்டிய தேவையும் இல்லை என இதற்கு முன் பிருந்த சில முதல்வர்கள் போல் அல்லாமல், முதல் வர் மு.க.ஸ்டாலின், தனது தெளிவான பாதையை அர சியல் உலகிற்கு காட்டியுள் ளார். இதே மனப்பான்மை யுடன், தேச ஒருமைப்பாடு, மாநில வளர்ச்சி என்பதை கருத்தில்கொண்டு, பிரதம ரும் செயல்பட்டால் ஜனநா யக மாண்பு காக்கப்படும்.

இவ்வாறு அத்தலையங் கத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




### ஆர்க்காடு தொகுதி கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# பி.என்.சுப்பிரமணியன் 9ஆம் ஆண்டு நினைவேந்தல்!

## கழகத்தினர் அஞ்சலி!



இராணிப்பேட்டை செப். 29 - கடமை உணர்வுடன் மக்கள் பணியாற்றி, கண் ணியம் மாறாமல் வாழ்ந்து காட்டி, கட்டுப்பாடு காத்து கழகம் வளர்த்தவர் ஆற் காடு நகரக் கழக செயலாள ராக 25 ஆண்டுகள் பணி யாற்றியவர். முன்னாள் வேலூர் மாவட்டப்பொரு ளாளர், முன்னாள் தணிக் கைக்குழு உறுப்பினர், ஆற் காடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பி.என்.சுப்பிர மணியன் அவர்களின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி 1.10.2024 அன்று நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மு.நகர செயலாளர், ஆற்காடு நகர அவைத்தலைவர் பி.என். எஸ்.இராஜசேகரன், இரா ணிப்பேட்டை மாவட்ட மருத்துவரணி அமைப்பா ளர், மருத்துவர் பி.என்.எஸ். சரவணன், ஆற்காடு நகர மன்ற துணைத் தலைவர், ஆற்காடு நகராட்சி இரா ணிப்பேட்டை மாவட்ட மகளிர் அணி துணைத்தலை வர் மருத்துவர் எஸ்.பவ ளக்கொடி சரவணன் மற் றும் குடும்பத்தினர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்து கின்றனர்.

# மதுரவாயல் வடக்கு பகுதி வட்ட செயலாளர்கள் கூட்டம்!

## பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் வேண்டுகோள்!

சென்னை, செப்.29- மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கு இணங்கவும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத்துறை அமைச்சர் மா.சுப் பிரமணியன் வழிகாட்டு தல்படி , சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி கழக வட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று (29.09.2024, ஞாயிற் றுக்கிழமை) காலை 10.00 மணி அளவில் நொளம்பூ ரில் உள்ள பகுதி கழக அலு வலகத்தில் பகுதி கழக நிர் வாகிகள் ஆ.மாலினி எம்.சி., ஆர்.கர்ணல், தீ.பாலாஜி எம்.ஏ.செந்தில், சுரேஷ், ம.உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மதுர வாயல் வடக்கு பகுதி கழ கத்திற்கு உட்பட்ட வட்ட கழக செயலாளர்கள் அனை வரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பொருள்: வாக்காளர் கள் பட்டியல் சரிபார்க்கும் பணி கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு மதுரவாயல் வடக்குப் பகுதி தி.மு.க. செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் தெரிவித் துள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட சாமந்தவாடா, கொல்லாலகுப்பம், புண்ணியம், பாண்டுரவேடு ஆகிய ஊராட்சி பகுதிகளைச் சார்ந்த அ.தி.மு.க. நிர்வாகிகள் மகளிர்கள் உள்ளிட்ட 100க்கு மேற்பட்டோர் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் சி.ஜே.சீனிவாசன் ஏற்பாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்கள். இந்நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேஸ்வரி ரவீந்திரநாத், வி.கிஷோர் மாவட்ட பிரதிநிதிகள் டி.செங்கையா, சி.பி.முத்து, ஒன்றிய நிர்வாகிகள் ஆஞ்சிநேயன், திருமலை லோகநாதன் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜே . தண்டபாணி, கிளைச் செயலாளர்கள் தாமோதரன், பரசுராமன், ஜானகிராமன், குமார் கோவர்தனம், சந்திரபாபு, ஆகியோர் கலந்து கொண்டனர்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பா.சா.பன்னீர்செல்வம்

### செப்டம்பர் 29 (2014)



கழக முன்னோடிகளில் ஒருவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த மா.பா.சாரதி அவர்களின் மகன். தலைமை செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், கூட்டுறவு கட்டிட சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இரண்டுமுறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. முனியசாமி

### செப்டம்பர் 29 (2009)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.